கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட
முத்தமிழறிஞர் கலைஞரின் 102-வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு

# சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!



ஆண்டிமடம் மேற்கு ஒன்றியம்,
அரியலூர் மாவட்டம்.



அரூர் மேற்கு ஒன்றியம்,
தருமபுரி மேற்கு மாவட்டம்.



கொடைக்கானல் நகரம் (நாயுடுபுரம்),
திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.



முசிறி கிழக்கு ஒன்றியம்,
திருச்சி வடக்கு மாவட்டம்.



வந்தவாசி கிழக்கு ஒன்றியம்,
திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்.



திருவண்ணாமலை மாநகரம் (வார்டு - 1, 2, 3 பகுதி),
திருவண்ணாமலை தெற்கு மாவட்டம்.



டி.என்.பாளையம் வடக்கு ஒன்றியம்,
ஈரோடு வடக்கு மாவட்டம்.



செம்பாக்கம் தெற்குப் பகுதி,
காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்.



சேரன்மகாதேவி மேற்கு ஒன்றியம்,
திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்.

ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட சந்தாதாரர்களில்

## தமிழ்நாட்டிலிருந்து பெண் பங்கேற்பாளர்களின் பிரதிநிதித்துவம் என்ன?

### மக்களவையில் – தே.மலையரசன் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 19 - மக்களவையில் கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் எழுப்பிய கேள்விகள் வருமாறு: -

2024-25 வரை அடல் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் (APY) பதிவு செய்யப்பட்ட சந்தாதாரர்களின் மொத்த எண்ணிக்கை என்ன? 2025-2026 நிதியாண்டில் புதிய சேர்க்கைகளுடன்.



ஒட்டுமொத்த சந்தாதாரர்களில் தமிழ்நாட்டிலிருந்து பெண் பங்கேற்பாளர்களின் பங்கு மற்றும் பிரதிநிதித்துவம் என்ன?

ஒன்றிய அரசு அதிகபட்ச உத்தரவாத ஓய்வூதியத் தொகையை மாதத்திற்கு ரூ.5,000 இலிருந்து ரூ.10,000 ஆக அதிகரிக்க முன்மொழிகிறதா? அப்படியானால் அதன் விவரங்கள் என்ன?

முன்மொழியப்பட்ட அதிகரித்த ஓய்வூதியப் பலனை செயல்படுத்துவதற்கான நிபுணத்துவ காலக்கெடு .

தமிழ்நாட்டில் உள்ள அமைப்புசாரா துறை தொழிலாளர்களுக்கு கல்வி கற்பித்து சேர்ப்பதற்கு அரசு எடுத்த நடவடிக்கைகள் மற்றும் அதன் தாக்கம் எவ்வாறு கண்காணிக்கப்படுகிறது ?

குறிப்பாக தென் மாநிலத்தைச் சேர்ந்த பெண்கள் மற்றும் பயனாளிகள் மத்தியில் அவர்களின் செயல்திறனை மதிப்பிடுவதற்கு ஏதேனும் மதிப்பீட்டு அறிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளனவா?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் விரைவில் திறக்கப்படவுள்ள வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்பட்டு வரும் பெரியார் நகர் பேருந்து நிலையத்தின் இறுதிக்கட்டப் பணிகளை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது சி.எம்.டி.ஏ. உறுப்பினர் செயலர்/ முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையர் எச்.ஆர்.கௌஷிக், மண்டலக் குழுத்தலைவர் திருமதி. சரிதா மகேஷ்குமார், தலைமைப் பொறியாளர் மகாவிஷ்ணு, கண்காணிப்பு பொறியாளர்கள் பாலமுருகன், ராஜன்பாபு, உள்ளாட்சிப் பிரதிநிதிகள் ஐ.சி.எப்.முரளிதரன், சந்துரு, மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் நாகராஜன், தாவூத்பீ, அமுதா, ஸ்ரீதணி மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

தேசிய இளைஞர் மேம்பாட்டு நிதியில்

## விளையாட்டு மேம்பாட்டுக்காக ஒன்றிய அரசு செய்தவை என்ன?

### மக்களவையில் – ஈரோடு கே.இ. பிரகாஷ் கேள்வி!

புதுடெல்லி, ஆக.19- தேசிய இளைஞர் மேம்பாட்டு நிதியில் விளையாட்டு மேம்பாட்டுக்காக செய்தவை என்ன? என்ற கேள்விக்கு தேசிய இளைஞர் மேம்பாட்டு நிதி 2021-ஆம் ஆண்டே நிறுத்தப்பட்டு விட்டதாக ஒன்றிய அரசு தகவல் தெரிவித்துள்ளது. திட்டம் நிறுத்தப்பட்டு விட்டதை பொதுவெளியில் அறிவிக்க மறுத்த ஒன்றிய அரசுக்கு கே.இ. பிரகாஷ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் விளையாட்டுத்துறை மேம்பாட்டில் தேசிய இளைஞர் மேம்பாட்டு நிதி (NYDF)யின் பங்களிப்பு என்ன என்பது குறித்து, நேற்று நாடாளுமன்றத்தில் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகத்திடம் கே.இ.பிரகாஷ் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு அத்துறை அமைச்சர் டாக்டர். மன்சுக் மாண்டவியா அளித்த பதில், ஒன்றிய அரசின் மெத்தனப்போக்கையும், இளைஞர் மேம்பாடு குறித்த அவர்களின் புரிதல் இன்மையையும் மீண்டும் ஒரு முறை நிரூபிக்கும் வகையில்



அமைந்துள்ளது.

அமைச்சரின் பதில் சில முக்கிய விஷயங்களை அம்பலப்படுத்தியுள்ளது.

**திட்டத்தின் நோக்கத்திலேயே குளறுபடி:**

2015ல் தொடங்கப்பட்ட தேசிய இளைஞர் மேம்பாட்டு நிதியானது, இளைஞர் மேம்பாட்டு உள்கட்டமைப்புக்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்றும், விளையாட்டு உள்கட்டமைப்புக்காக அல்ல என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதுவே மிகப்பெரிய முரண்பாடு. இந்த நிதிக்கான கொள்கை வரைவை அளித்த 'National Youth Policy 2014-ல் இளைஞர் மேம்பாட்டுக்கு விளையாட்டு ஒரு முக்கிய அங்கம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனினும், விளையாட்டு உள்கட்டமைப்பை நிதி வரையறைக்குள் கொண்டுவராதது குளறுபடியாகவே தெரிகிறது.

**நிதிப் பயன்பாடு குறித்த தகவல் இல்லை:**

இந்த நிதியிலிருந்து எந்த தொகையும் விளையாட்டு உள்கட்டமைப்புக்கோ அல்லது நேரடியாக விளையாட்டு வீரர்களுக்கோ வழங்கப்படவில்லை என்று அமைச்சர் கூறியுள்ளார். அப்படியானால், இந்த நிதி எந்தெந்த இளைஞர் மேம்பாட்டுத் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்பட்டது என்ற தெளிவான தகவல் அளிக்கப்படவில்லை.

**அறிவிப்பே இல்லாமல் நிறுத்தப்பட்ட திட்டம்:**

தேசிய இளைஞர் மேம்பாட்டு நிதி 2021-ல் நிறுத்தப்பட்டு, மீதமுள்ள தொகை இந்தியாவின் ஒருங்கிணைந்த நிதிக்கு மாற்றப்பட்டதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். ஒரு திட்டம் 5 ஆண்டுகளில் அதன் நோக்கத்தை நிறைவேற்ற முடியாமல் நிறுத்தப்படுவதே வருந்தத்தக்கது எனும் நிலையில், அது குறித்து எந்த அறிவிப்பும் இல்லாதது மேலும் வருந்தச் செய்கிறது. தற்போது இந்த கேள்விக்கான பதிலில் தான் முதன்முறையாக ஒன்றிய அரசு இதுபற்றி வாய் திறந்துள்ளது.

இந்த திட்டம் செயற்பாட்டில் இருந்தவரை, பெயரளவில் மட்டுமே இளைஞர் மேம்பாட்டுக்கானதாக இருந்துள்ளது. கள யதார்த்தம், திட்டமிடல், நிதியை பயன்படுத்துதல் ஆகியவற்றில் தொடர்ந்து தெளிவின்மை நீடித்திருக்கிறது. இதன் விளைவாகவே, முறையான அறிவிப்பு எதுவும் இல்லாமல் திட்டம் மிகச்சில ஆண்டுகளிலேயே நிறுத்தப்பட்டிருக்கிறது.

இதன் மூலமாக நமக்கு தெரிய வருவது ஒன்றே ஒன்றுதான். இளைஞர்களின் நலனுக்கென ஒன்றிய அரசு தீட்டும் திட்டங்கள் வெறும் விளம்பரத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன என்பதே.



ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அய்யப்பன்தாங்கல் ஊராட்சியில் உள்ள பேருந்து நிலையத்தை மேம்படுத்தும் பணியை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அருகில் குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், ஒன்றியக்குழு உறுப்பினர் லோகநாயகி சுவாமிநாதன், ஊராட்சி மன்றத் தலைவர் ஜெமில பாண்டுரங்கன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.